[23rd March 1961

Coconut palm (yield)

* 1012 *Q*.—Sri K. B. S. MANI (on behalf of Sri T. T. DANIEL) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) what is the average yield of the nuts per coconut tree in the various districts of the State; and

(*b*) how this statistics is collected?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The average yield of nuts per coconut palm, districtwise in this State in 1959–60 are as follows :—

Chingleput—37.	Thanjavur—49.
South Arcot—46.	Madurai—38.
North Arcot—36.	Ramanathapuram—37.
Salem—47.	Tirunelveli—46.
Coimbatore—40.	Kanyakumari—36.
Tiruchirappalli—37.	

(*b*) The average yield per coconut palm is worked out on the basis of the average yield per acre and the number of palms per acre. The yield per acre is determined on the basis of the yield in the Government farms and the local knowledge of the Agricultural officers. The number of palms per acre is calculated on the basis of the estimates prepared during the sample survey conducted in 1959–60 and other available information in the department.

Sri K. B. S. MANI : இந்த "பாரம்களை" அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும், தென்னை விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான ஆராய்ச்சியும் நடைபெறுகிறதா ? அப்படி நடைபெற்றிருந்தால், அதை நல்ல முறையிலே விளக்கமாக தமிழிலே அச்சடித்துப் பொதுமக்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படும்படிச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. அச்சுப் போட்டுக் கொடுத்தால் மட்டும் பயன் இல்லை. ஆராய்ச்சியைத் தவிர, தென்னை மரங்கள் வளர்ப்பவர்கள் அதிலே அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் வகையிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri A. VEDARATHNAM : இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில் எல்லாவற்றைக்காட்டிலும் அதிக "ஈல்டு" இருக்கிற அந்தப் பகுதியில் தென்னையை விருத்தி செய்வது தானே முறை. தஞ்சாவூரில் இதில் விசேஷ கவனம் செலுத்துவதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கு 49 வீதம் சராசரி "ஈல்டு" இருக்கிறது. அங்கே விசேஷ கவனம் எந்த முறையில் செலுத்தப்பட்டு, என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தஞ்சையில் 49, என்றால் அதற்கு அடுத்தது சேலத்தில் 47. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒன்று தான் குறைவு, 46. ஏறக்குறைய அதிக "ஈல்டு" கொடுக்கும் மாவட்டங்கள் இம்மாதிரிச் சில இருக்கின்றன. ஆனால் தஞ்சாவூரில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது என்றால், அங்கே ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அங்கே நாத்து வைக்கப்பட்டு, அது கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் தென்னை மரம் வைத்து உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு வேண்டிய யோசனைகள், மற்ற உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

23rd March 1961]

SRI N. MARUDACHALAM : கோவையில் நொய்யல் நதிக்கரையில் தென்னந் தோப்புகள் அதிகமாக இருக்கிறது. சில சமயங்களில் அங்கே தண்ணீர் அடித்துக் கொண்டு போய் தென்னந் தோப்பு சேதப் படுத்தப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் இதற்கு வேண்டிய பாதுகாப்பு சுவர் கட்டி அங்கு இருக்கும் தென்னை மரங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தென்னை மரத்திற்கு ஈரம் வேண்டும். தென்னை மரம் கடலோரத்தில் இருந்தால் நல்லது. கடலோரம் கோவையில் இல்லை. நொய்யல் போன்ற ஆற்று ஓரங்களில் தென்னை மரங்கள் இருந்தால், அதனுடைய சொந்தக்காரர்கள் அதற்கு என்ன பாதுகாப்பு வேண்டுமோ அதில் முதலில் அக்கறை எடுத்துக் கொண்டு, பிறகு தெரிவித்தால் விவசாய இலாகா அதைக் கவனித்து எத்தகைய உதவி கொடுக்க முடியுமோ, அல்லது எத்தகைய யோசனை அளிக்கக் கூடுமோ அதில் கவனம் செலுத்துவார்கள்.

SRI V. SUBBIAH : இராமனுதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ப் பதற்கு மணற்பாங்கான கடலோரம் இருக்கிறது. அந்த நிலையில் இருந்தும் கூட அங்கு "ஈல்டு" அவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறைவாக இருப் பதற்குக் காரணம் விவசாயிகள் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பது தான். நான் நேற்றுகூட விடை அளித்தேன், விவரம் கொடுத்து இராமனுதபுரம் மாவட்டத்தில் 10,000 ஏக்கர் நிலத்தில் விவசாய இலாகா கவனம் செலுத்தி தென்னை வளர்ப்பதில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. நான் சில இடங்களில் விசாரித்தேன். இராமேசு வரம் பிராந்தியத்தில், ராமனுதபுரம் மாவட்டத்தில் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒன்றுமே விளைவிப்பது இல்லை. காட்டு இலாகா வுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ குத்தகைக்குக் கொடுத்து தென்னை அல்லது சவுக்கு வளர்க்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னுல் அதைப் பற்றி அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை. பேருக்கு 30 ஏக்கர், 50 ஏக்கர் இருந்தால் போதும் என்று அவர்கள் நினைக்கிருர்கள்.

SRI M. A. B. ARUMUGHASAMY : தென்னை மரங்கள் வளர்ப் பதை ஊக்குவிக்கும்பொருட்டு, மழை காலங்களில் ஆற்று ஓரங்களில் ஏற்படும் வெள்ளத்தினுல் உண்டாகக்கூடிய சேதத்தைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர்கள் அமைக்கும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் முறை யில் சர்க்கார் அதற்கு ஒரு குறிப்பிட்ட உதவித் தொகை மூலம் நிவாரணம் அளித்து, விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கெல்லாம் முதன் முதலாக அடிப்படையிலே விவசாயிகள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் போதியஅக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்றுல், கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் கொஞ்சம் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். அதற்கு மேலே அரசாங்கம் வேண்டியதைச் செய்யும்.

Road to Aravatla Village.

*1013 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவில் அரவட்லா என்கிற ஊர் மலையின் மேல் இருப்பதால் அதற்கு வண்டி போக்குவரத்து பாதை சரியாக இல் லாத காரணத்தினுல் மேற்படி ஊர் மக்களுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் கழுதையின்பேரில் கொண்டுபோகப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?